# இலக்கியங்கள் போற்றும் விருந்தோம்பல்

**முனைவர். வெ. ராதா**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**பூம்புகார்க் கல்லூரி (தன்னாட்சி) மேலையூர்-609107.**
**மயிலாடுதுறை மாவட்டம். munaivarradha@gmail.com**

**8**

**ஆய்வுச்சுருக்கம்**

"விருந்து" என்ற சொல்லுக்குப் "புதுமை" என்பது பொருள். உறவினரும் நண்பரும் இல்லாத புதிய நபர் நம் வீடு தேடி வரும்போது அவர்களை "விருந்தினர்" என்பர். நம் வீட்டுக்கு வரும் ஒவ்வொரு உறவினர்களையும், நண்பர்களையும் இன்முகத்துடன் வரவேற்று, மகிழ்ச்சியுடன் அன்பாக உபசரிப்பது விருந்தோம்பலின் தலையாய பண்பாகும்.

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள் -81)

இல்வாழ்க்கையின் சிறப்பே விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்குவது தான். வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்வதே ஆகும். தமிழரின் பண்பாட்டில் சிறப்பான விருந்தோம்பலின் சிறப்புகளை இலக்கியங்களின் வழியாக ஆராய்வதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாகும்.

**ஆய்வு நோக்கம்**

பண்டைத் தமிழரின் வாழ்வியல் ஆவணமாக இருக்கின்ற சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள விருந்தோம்பல் பண்புகளை அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு **"இலக்கியங்கள் போற்றும் விருந்தோம்பல்"** என்னும் தலைப்பை நோக்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்**

விருந்து (தொல். பொருள் 1495)
நல்விருந்து (குறள் 84)
மங்கையர் முகம் (கம்பராமாயணம் 476)
முறுவல் (நற்றிணை 120)
அகன்மனை (கலித்தொகை 83:1)
அமுது (ஔவை தனிப்பாடல்)
வீடு விழல் (தனிப்பாடல்)

**முன்னுரை**

தமிழரின் பண்பாட்டு சிறப்புகளில் முதன்மையானதும், சிறப்பானதும், தலைசிறந்ததும் "விருந்தோம்பல்" ஆகும். மக்கள் உயிர்வாழ உணவு இன்றியமையாதது. மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் என்ற மூன்றில் முதல் இடம்பிடிப்பது உணவே

ஆகும். தாம் உண்பதோடு மட்டுமல்லாமல் உணவில்லாமல் வறுமையில் வாடிய ஏழை, எளியவர்களுக்கும், வீட்டிற்கு வரும் புதியவர்களுக்கும் உணவினை வழங்கி அவர்கள் உண்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைவார்கள். ”மருந்தே ஆயினும் விருந்தோடு உண்” என்று ஔவையார் கூறுகிறார்.

“இட்டு கெட்டவர் யாரும் இல்லை” என்றும் கூறுவார்கள். அந்தளவிற்கு தானமும், தர்மமும் தலைகாக்கும் என்பது நம்முடைய மரபாகும். அதன் வாயிலாகவே ஈகை பண்பு அடுத்தவர்க்கு உணவளிக்கும் உயரிய மாண்பு தமிழர் வரலாற்றில் இலக்கியங்களில் பெரிதும் பேசப்பட்டிருப்பதை இக்கட்டுரையின் வாயிலாக காணலாம்.

**இலக்கணத்தில் விருந்தோம்பல்**

தொல்காப்பியர் விருந்து என்றும் சொல்லுக்குப் “புதுமை” என்ற பொருண்மையை

“விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே” (தொல்.231)

என்றுரைக்கின்றார்.

“கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி” (புறம்-35)

முன்தோன்றிய நம் தமிழ்குடியின் சிறப்பே விருந்தோம்பல் என்பதை,

“விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்னை கிழவோன் மாண்புகள்“” (தொல்.1102)

விருந்தினரைப் பாதுகாத்தலும் சுற்றத்தாரைப் பாதுகாத்தலும் தலைவியின் பண்புகளாக தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகிறது.

**இலக்கியங்கள் போற்றும் விருந்தோம்பல்**

தமிழர்கள் நாகரிகம், பண்பாட்டில் சிறந்து விளங்கியதைப் போல் விருந்தோம்பலிலும் சிறந்து விளங்கியுள்ளார்கள். “உணவு விடுதிகள் இல்லாத காரணத்தினால் உண்டிக்கும் உறையுளுக்கும் அனைவரும் செல்லும் ஊர்களையே நம்ப வேண்டியிருந்தது. புதிதாக வருவோர்க்குப் பசிக்கு உணவளிக்க வேண்டிய நிலை இருந்தமையால் விருந்தோம்பல் பண்பாடு தமிழகத்து இல்லங்களில் உருவாயிற்று. (பி. சேதுராமன், ஆற்றுப்படை இலக்கியத்தில் தமிழர் விருந்தோம்பல்) என்ற கருத்து காரணத்தை ஆராய்ந்துள்ளது.”[1]

இக்கருத்தை வலியுறுத்தும் விதமாக, விருந்தினர் மூலம் தலைவன், தலைவியரிடையே ஏற்படும் ஊடலும் கூடலாக மாறியுள்ளதை,

“தடமருப்பு எருமை மட நடைக்குழவி
சிறிய முள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம் காண்கும்மே.” (நற்றிணை 120)

மருத நிலத்தலைவியின் ஊடலை விருந்தோம்பல் நீக்கியதாக இப்பாடல் உணர்த்துகிறது.

விளையாட்டின் மூலம் சிறுவயது முதலே தமிழர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விருந்தோம்பல்

பண்பை ஊட்டி வளர்த்ததை,

“தொடலை ஆயவொடு கடல் உடன் ஆடியும்
சிற்றில் இழைத்தும் சிறுசோறு……” (அகம் -10)

இப்பாடல் மூலம் உணர முடிகிறது.

குறுந்தொகையில் நெய்தல் நிலத்தலைவி தன் தோழியிடம் பலர் வரும் அளவிற்குள்ள பெரிய வாயிலை அடைப்பதற்கு முன்னர் உணவருந்த வரவிருக்கும் விருந்தினர் யாராவது இருக்கின்றார்களா என அறிவிக்குமாறு வினவுகிறாள்.

“புள்ளும் மாவும் புலம்பொடு வதிய
வருவீர் உளரோ? எனவும்
வாரார் தோழி நம் காதலரே” (குறுந் - 118)

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது. அந்த காலத்தில் வீட்டின் வெளியே திண்ணை வைத்து கட்டியதற்கு காரணமே, வழிப்போக்கர்கள் இளைப்பாறி, இல்லத்தில் உணவருந்தி செல்வதற்கே என்பதை இப்பாடல் மூலம் உணர முடிகிறது.

கலித்தொகையில் இயற்கைக்கும் விருந்தளித்ததை,

“இன்னுயிர் செய்யும் மருந்தாகிப் பின்னிய
காதலர் – எயிறு ஏய்க்கும் தண் அருவி
நறுமுல்லைப்………..
துயர்அறு கிளவியொடு !
அயர்ந்தீகம் விருந்தே.” (கலி.31, 15-20)

என்ற பாடலில், “பொருளீட்டச் சென்ற தலைவன் திரும்ப வரும் நேரம் மகிழ்ச்சி என்பதைத் தெரிவிக்கும் விதமாக இளவேனிற் அமைந்தது என்பதும் அதற்கு விருந்து படைத்தல் வாயிலாக இயற்கைக்கும் விருந்தளித்த குணமானது இங்கு புலப்படுகிறது.”[2]

பெரியபுராணத்தில், விருந்தோம்பலின் உச்சத்தைத் தொட்டு காட்டியுள்ளனர். வீட்டிற்கு வந்த விருந்தினரான அடியவர்க்காக எவரும் கொடுக்க முன் வராத தன் மகவை அறுத்துக் கறி சமைத்ததை,

“நாதன் தானும் ஒரு குடிக்கு நல்ல சிறுவன் ஒரு மகனைத்
தாதை அரியத் தாய் பிடிக்கும் பொழுதில் தம்மில் மனமுவந்தே
ஏதம் இன்றி அமைத்த கறி யாம் இட்டுண்பது என மொழிந்தார்”
(சிறு.நா.புராணம் – பா.3710)

தன்னுடைய ஒரே ஐந்து வயது மகனை பிள்ளைக் கறிக்காக அர்ப்பணித்ததை அறிய முடிகிறது.

ஒரு மழைக்காலத்தில் இரவு நேரத்தில் வந்த சிவனடியாருக்கு விருந்து அளிக்க ஒரு பொருளும் இல்லாதபோது தான் முந்திய நாள் வயலில் விதைத்திருந்த நெல்லை வாரி வந்து மனைவியிடம் கொடுத்து உணவு சமைத்து விருந்து அளித்த நிகழ்ச்சியை பெரியபுராணத்தில் இளையான்குடி மாறநாயனார் புராணம் (பாடல். 17,18) எடுத்துரைக்கின்றது.

தமிழர்கள் அனைவருடனும் அமர்ந்து கூட்டுண்ணும் பண்பு இருந்ததை இலக்கியங்கள்

எடுத்துரைத்து உள்ளன. சிறு வயது குழந்தைகள் விளையாடும்போது “கூட்டாஞ்சோறு” சமைத்து உண்ணுவார்கள். இதையே “ சீறூர் மன்னர் சமுதாயத்தின் விருந்து பேணும் பண்பும், ஊரொடு தலைவி பசித்திருந்தாள் என்பதும் இக்கூட்டுண்ணுதலின் எச்சங்கள் ஆகும்.”[3]

இதனையே மலைகளில் வாழும் குறவர்கள் வரும் விருந்தினர்களை மகிழ்வுடன் வரவேற்று தாம் சமைத்த மாமிசத்தையும், தினையரிசிச் சோற்றையும் அனைவரும் ஒன்றாக உண்ணுவார்கள். பலநாள் உறவுடையவர் போன்று புதியவர்களையும் ஏற்றுக்கொள்வர் என்பதை,

“நும் இல் போல கேளாது கெழீஇ
சேட் புலம்பு அகல இனிய கூறி
குரூஉக்கண் இறடிப்பொம்மல் பெறுகுவீர்” - (மலைபடுகடாம் 168-169)

தாம் உண்ணும் உணவினை எவ்விதத் தயக்கமுமின்றி வரும் விருந்தினர்க்கு உபசரித்து மகிழும் பண்பினை மலைபடுகடாம் மூலம் உணரமுடிகிறது.

**வள்ளுவர் போற்றும் விருந்தோம்பல்**

நாள்தோறும் தன்னை நாடிவரும் விருந்தினரைப் போற்றுகின்றவருடைய இல்வாழ்க்கை என்றுமே துன்பத்தால் பாழ்படுவது இல்லை என்பதை,

“வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று” (குறள்-83)

வள்ளுவர் இவ்வாறு கூறியுள்ளார்.

“கிரேக்கத்தில் ஒரு வீட்டுக்கு வெளியே சென்று கொண்டிருக்கும் அந்நியர் ஒருவரை அவ்வீட்டில் வசிப்பவர்கள் இல்லத்தினுள் வருமாறு அழைப்பு விடுப்பர். வீட்டின் தலைவரான புரவலர் அந்த அந்நியரின் பாதங்களைக் கழுவி உணவு மற்றும் திராட்சை ரசத்தை அளித்து அவர் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட பிறகே அவரது பெயரைக் கூடக் கேட்பார் என்கிறது கிரேக்க வரலாறு”[4] கிரேக்க வரலாற்றையே மிஞ்கிகிறது, திருக்குறள்.

“ வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்” – (குறள் 85)

வீட்டுக்கு வந்த விருந்தினரை முதலில் உணவு உண்ணச் செய்து மீத உணவை உண்பவர்களது நிலத்தில் விதைக்காமலே பயிர்விளையும் என்பதை வள்ளுவர் எடுத்துரைத்துள்ளார். அவரின் சிந்தனை சிந்திப்பதற்குரியதாகும்.

**காப்பியங்களில் விருந்தோம்பல்**

சிலப்பதிகாரத்தில், கொலைக்கள காதையில்

“அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும், துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும்” (கொ.காதை 71-73)

என்ற பாடலில் அறநெறிச் செல்வோர்க்கு உணவு, உடை அளிப்பதும் மேலோர்களைப் பேணிப் பாதுகாப்பதும், தவ வாழ்வு மேற்கொண்டு ஒழுகுபவர்களை வரவேற்று உபசரிப்பதும் மிகச்சிறப்புடையதான விருந்தினர்களுக்கு உணவளித்துக் காப்பதும் போன்ற விருந்தோம்பல்

முறைகளைக் கோவலன் பிரிவினால் கண்ணகி செய்யாதிருந்தாள் என்பதை இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

" விருந்து கண்டபோது என்னுறுமோ வென்று
விம்மும்" (கம்ப. சுந்தரகாண்டம். கா.ப.15:2)

என்று கணவனைப் பிரிந்த சீதை விருந்து அளிக்க முடியாத நிலையை உணர்த்துகிறது.

மணிமேகலையில் உணவின் முதன்மையைப் பற்றி கூறும்போது,

"அறம் எனப்படுவது யாது எனக்கேட்பின்
மறவாது இதுகேள் மண் உயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும்
அல்லது கண்டது இல்" (மணிமேகலை 288-291)

பசித்திருப்பவரை நாடி, தேடி சென்று பசியாற்றுவதே தர்மம் என்று மணிமேகலை கூறுகிறது.

இவ்வாறு காப்பியங்களில் விருந்தோம்பலின் பண்பு விஞ்சி நிற்பதை அறிய முடிகின்றது.

"சக மனிதர்களை நேசிக்கும் பண்பு இன்று அருகியுள்ளது என்ற வருத்தித்தில்தான் விருந்தோம்பல் குறித்த பேச்சுகளை உருவாக்கிட முயன்றுள்ளார் இறையன்பு"[5] அன்று சத்திரம், சாவடிகளை உருவாக்கி அரசர் நெல்லையும், தானியங்களையும் கொடுத்து வழிப்போக்கர்களின் துயரினைப் போக்கினார். ஆனால் இன்று விருந்தோம்பல் பண்பு மக்களிடையே குறைந்து வருவதை இறையன்பு அவர்களின் நூல் மூலமாக உணரமுடிகிறது.

ஒவ்வொருவருடைய இல்வாழ்க்கையின் சிறப்பே விருந்தோம்பல்தான். எனவே "விருந்தோம்பல் பண்பை" போற்றி முன்னோர்களின் வாழ்க்கை நெறிப்படி வாழ்வதையே இலட்சியமாக கொள்ள வேண்டும். விருந்தோம்பலை போற்றும் இல்லறமே நல்லறமாகும்.

**முடிவுரை**

- விருந்தோம்பல் நமது பண்பாட்டின் செயல்பாடாக குழந்தைப் பருவத்திலிருந்தே பயிற்றுவிக்கப்படுவதை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றன.
- விருந்து – புதுமை – விருந்தினர் – புதியவர் – விருந்தோம்பல் என்ற பண்பாட்டுச் சொற்களை இலக்கணம் மூலம் உணர முடிகின்றன.
- நற்றிணையில் ஊடலையும் கூடலாக்கும் செயல் குறித்தும், குறுந்தொகையில் இரவில் வீட்டின் கதவை அடைக்கும்முன் விருந்தினர் வருகிறார்களா என பார்க்கப்படுவதையும், கலித்தொகையில் விருந்தின் சுவையை இயற்கைக்கும் படைக்கும் தன்மையையும் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- பெரியபுராணத்தில் தனது ஒரே மகனை பிள்ளைக்கறி செய்து அமுது படைப்பதையும், இரவு நேரத்தில் முந்திய நாள் வயலில் விதைத்திருந்த நெல்லை வாரிவந்து உலர்த்தி, குத்தி உலையில் இட்டு உணவு பரிமாறிய விதத்தையும் விருந்தோம்பலின் அறமாக சுட்டிக்காட்டியுள்ளதை உணரமுடிகின்றன.

- கூடி வாழ்வதே சமுதாயம் என்பது போல, கூடி உண்ணுவதே சிறப்பு என்பதையும், மலைகளில் குறவர்கள் மாமிசத்தையும், தினையரிசிச் சோறிட்டு விருந்து வைத்தலை மலைபடுகடாம் எடுத்துரைத்துள்ளதை அறிய முடிகின்றன.
- திருக்குறளில் விருந்தோம்பலின் சிறப்பாக விருந்தினருக்கு விருந்து அளிப்பவர் நிலத்தில் விதை விதைக்காமலே பயிர் விளையும் என்பதையும், சிலப்பதிகாரம், கம்பராமாயணத்தில் கோவலனும், இராமனும் இல்லாததால் விருந்தினரை உபசரிக்க முடியாத நிலையை நினைத்து சீதையும், கண்ணகியும் வருந்துவதை உணரமுடிகின்றன. " உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று மணிமேகலையில் விருந்தினரைப் போற்றும் விதத்தையும் பதிவு செய்துள்ளன.
- இன்றைய காலத்தில் விருந்தோம்பலின் பண்பு குறைந்து வருவதையும், வாழ்வு முழுமையடைவதே விருந்தோம்பல் பண்பு மூலமாகதான். நாம் காலம் காலமாக பின்பற்றும் விருந்தோம்பலை நம் சந்ததியரும், நமக்கு அடுத்து வரும் சந்ததியர்களும் விருந்தோம்பலைப் போற்றி, உபசரித்து பேண வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்த பண்பாட்டுக் கருத்தரங்கமே தமிழர்களின் வழிவழியான பண்பாட்டை இன்றைய தலைமுறையினருக்கு பறைசாற்றுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை உணர முடிகின்றன. எனவே " தமிழ்ப் பண்பாட்டின் மெய்யியலான விருந்தோம்பலைக் காப்போம்; வளர்ப்போம்."

**துணைநின்றமை**

1. முனைவர். மா. பத்மபிரியா - தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல், முத்துக்கமலம், இணைய இதழ்.
2. முனைவர். மூ. சிந்து – இலக்கியங்கள் போற்றும் விருந்தோம்பல் பதிவுகள்.
3. பெ. மாதையன் - சங்க கால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும், ப.42,
4. முனைவர் பூ.மு. அன்புசிவா – வள்ளுவர் காட்டும் விருந்தோம்பல் பண்புகள்.
5. ந. முருகேச பாண்டியன் – தமிழரின் விருந்தோம்பல் பண்பு, மே 2021.